**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.212/2019</u>**

பெயர் : அருள்தாஸ் P.W.1.

த/பெ. : வில்லியம்ஸ்

தேதி : 01.02.2024

<u>குறுக்கு விசாரணை:—</u>

சாட்சி அனுமதியின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை நான் மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேனா அல்லது ஜெம்ஸ் நிறுவனத்தின் நிர்வாகிகளும் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோமா என்றால் அவர்கள் எனக்கு கொடுத்த அங்கீகாரம் (Authorization) அளித்தன் பேரில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அவர்கள் எனக்கு இந்த வழக்கை நடத்துவதற்கு அங்கீகாரம் (Authorization) அளித்ததற்கான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

நான் தற்போது காழியப்பநல்லூரில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கினை தாக்கல் செய்த காலத்தில் எங்கு வசித்து வந்தேன் என்றால் காழியப்பநல்லூரில் தான் வசித்து வந்தேன். தாவா சொத்தின் நான்கெல்லை மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் 349/1B ஆகும். தாவா சொத்தானது காலி மனையாக உள்ளதா அல்லது கட்டிடம் ஏதேனும் உள்ளதா என்றால் நான் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் தாவா சொத்தில் கீற்றுக்கொட்டகையும், ஆர்.சி.சி. கட்டிடமும் இருந்தது. தற்போது ஆர்.சி.சி. கட்டிடம் மட்டும் உள்ளது. அந்த கட்டிடமானது கிருஸ்தவ வழிபாட்டுத்தளமாக உள்ளது. தற்போது மூடப்பட்டுள்ளது. மேற்படி கிருஸ்தவ வழிபாட்டுக்கட்டிடத்தை எப்போது கட்ட ஆரம்பித்து எப்போது முடித்தேன் என்றால் 2017 ஆம் ஆண்டு கடைசியில் கட்ட ஆரம்பித்தோம், 2018 ஏப்ரல்

மாதத்தில் கட்டி முடித்தோம்.

நான் ஜெம்ஸ் நிறுவனத்திற்கு இனாம்சாசனம் மேற்படி கிருஸ்தவ வழிபாட்டுத்தளம் கட்டுவதற்கு முன்பே இனாமாக கொடுத்துவிட்டேன். தாவா சொத்தில் கிருஸ்தவ வழிபாட்டுத்தளத்தை நான் தான் கட்டினேன். ஜெம்ஸ் நிறுவனம் கட்டவில்லை. ஜெம்ஸ் ஆகஷன் சென்டருக்கு தாவா சொத்தை இனாமாகதான் கொடுத்தேன் என்றால் சரிதான். இனாம் சாசனம் எழுதிக்கொடுத்த தேதி, மாதம், வருடம் தெரியுமா என்றால் தெரியும். 06.10.2017 அன்று எழுதிக்கொடுத்தேன். வீடு உள்ள இடத்தை 2016 ஆம் ஆண்டு இனாம்சாசனம் செய்து கொடுத்தேன். இனாம்சாசனத்தில் எனக்கு அந்த சொத்து எவ்வாறு வந்தது என கூறியுள்ளேனா என்றால் பூர்வீக சொத்து என்று கூறியுள்ளேன்.

வாசாஆ 5 ஆவணத்தில் நான் கிரயம் பெற்ற சொத்து என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்தை மயிலாடுதுறையில் உள்ள ராஜா என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். நான் தாவா சொத்தை ஜெம்ஸ் ஆக்ஷன் சென்டருக்கு இனாமாக கொடுத்துவிட்டு தற்போது அந்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து கல்லறைத்தோட்டமா அல்லது கடலைத்தோட்டமா என்றால் கடலைத்தோட்டம் ஆகும். பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள சர்ச்சில் மதபோதகராக 2015, 2016 ஆம் ஆண்டில் இருந்தார். பிரதிவாதி மேற்படி காலகட்டத்தில் சர்ச்சை நடத்தி வந்தபோது நான் எங்கு இருந்தேன் என்றால் காழியப்பநல்லூரில் இருந்தேன். நான் இந்த வழக்கினை சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தபோது நான் எங்கு வசித்து வந்தேன் என்றால் காழியப்பநல்லூரில் தான் வசித்து வந்தேன்.

பிரதிவாதி 1999 லிருந்து தாவா சொத்தினை சுத்தம் செய்து அங்கு கீற்றுக்கொட்டகை அமைத்து சர்ச் நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி காழியப்பநல்லூரில் சர்ச் நடத்தி வந்தகாலத்தில் நான் திருச்சியில் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதியால் கட்டப்பட்ட கொட்டகையை திருச்சபை கட்டிடம் கட்டுவதற்காக யாரால் பிரிக்கப்பட்டது என்றால் நான் தான் கட்டினேன். நான் தான் பிரித்தேன். தற்போது திருச்சபை கட்டிடம் உள்ள இடத்தில் இருந்த

கீற்றுக்கொட்டகையை நான் 2015 ல் கட்டினேன். ஜெம்ஸ் ஆக்ஸன் சென்டர் பெயரில் எப்போது பட்டா பதிவை ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றால் நான் இனாம் சாசனம் எழுதிக்கொடுத்த பிறகு 2017 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக் கொடுத்தேன். தாவா சொத்தை பொறுத்து 2006 ஆம் ஆண்டில் எனது பெயரில் பட்டா பதிவுகோரி தரங்கம்பாடி வட்டாச்சியர் அலுவலத்தில் மனு கொடுத்தேன் என்றால் சரிதான்.

2006 ல் நான் பெற்ற பட்டா தனிப்பட்டாவா அல்லது கூட்டு பட்டாவா என்றால் கூட்டு பட்டா ஆகும். தாவா சொத்தின் தற்போதைய உரிமையாளர் யார் என்றால் ஜெம்ஸ் ஆக்ஸன் சென்டர் தான் உரிமையாளர் ஆவார். தாவா சொத்தின் உரிமையாளரான ஜெம்ஸ் ஆக்ஸன் சென்டர் வழக்கினை தாக்கல் செய்யாமல் நான் தாக்கல் செய்வதற்கான காரணம் என்ன வென்றால் ஜெம்ஸ் ஆக்ஸன் சென்டர் நிறுவனத்தார் பீகாரில் உள்ளதாலும், நான் எனது சொத்தை மேற்படி நிறுவனத்திற்கு இனாம்சாசனம் எழுதிகொடுத்ததாலும், அவர்கள் தாவா சொத்தை பொறுத்து வழக்கு தொடர்வதற்கு எனக்கு அதிகாரம் கொடுத்ததால் நான் தாக்கல் செய்துள்ளேன்.

ஜெம்ஸ் நிறுவனத்தார் எனக்கு எந்த அங்கீகாரமும் கொடுக்க வில்லை என்றாலும். எனக்கு அங்கீகாரம் கொடுத்ததாக நான் பொய்யான ஆவணத்தை தயார் செய்து அதன் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஜெம்ஸ் நிறுவனத்தின் தலைவர் யார் என்றால் தமிழ்நாட்டின் யார் என்றால் ஏர்னஸ்ட் ரவி ஆவார். பீகாருக்கு அகஸ்டின் ஜெபக்குமார் ஆவார். இந்த வழக்கை தாக்கல் செய்யும் காலத்தில் ஏர்னஸ்ட் ரவி சென்னையில் இருந்தார். அவரது சொந்த ஊர் திருச்சியாகும். நானும் ஏர்னஸ்ட் ரவி என்பவரும் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ள திருச்சபையை பரிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக பொய்யான ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

2016 ஆம் ஆண்டு தாவா சொத்திற்கான பட்டாவை ஜெம்ஸ் ஆக்ஸன் சென்டர் பெயருக்கு மாற்றம் செய்ய தரங்கம்பாடி வட்டாச்சியர் அலுவலகத்தில் மனுத்தாக்கல் செய்தபோது ஜெம்ஸ் ஆக்ஸன் சென்டரில் நிர்வாக பொறுப்பில் இருந்தேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கான தற்போதைய பட்டா எண் எனக்கு நினைவில் இல்லை. நான் 2016 ஆம் வருடம் எனது பெயரில் இருந்த கூட்டுபட்டாவை வைத்துதான்

இரண்டாவது முறையாக இனாம் சாசனம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள கட்டிடத்திற்கான மின் கட்டணத்தை யார் செலுத்தி வருகிறார்கள் என்றால் நான் மின்கட்டணத்தை முன்தொகையாக செலுத்தி வைத்துள்ளேன். நான் தாவா சொத்திற்கான கடைசியாக எப்போது மின் கட்டணம் செலுத்தினேன் என்றால் 2022 ஆம் வருடம் கட்டினேன் தேதி, மாதம் நினைவில் இல்லை. அதன் பிறகு மேற்படி சர்ச் ஆனது மூடப்பட்டுள்ளதால் அதற்கு மின் கட்டணம் வசூலிக்கப்படவில்லை.

தாவா சொத்தில் உள்ள சர்ச் பிரதிவாதியின் வசத்தில் உள்ளது என்றால் சரியல்ல. அதற்கு பிரதிவாதிதான் மின் கட்டணம் செலுத்தி வருகிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். தாவாசொத்தில் உள்ள சர்ச்சின் சாவி என்னிடம் தான் உள்ளது. அதை என்னால் நீதிமன்றத்தில் ஒப்படைக்க இயலும். தாவா சொத்தில் உள்ள சங்கிலி போட்டு பூட்டப்பட்ட சிறிய பூட்டின் சாவி பிரதிவாதியிடம் உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள மின் கட்டண அட்டை எந்த வருடத்திற்குரியது என்றால் தற்போது நினைவில் இல்லை. அந்த மின்கட்டண அட்டையானது யார் பெயரில் உள்ளது என்றால் தற்போது ஜெம்ஸ் நிறுவனத்தின் பெயரில் உள்ளது. நான் தாவா சொத்திற்கான மின்கட்டணத்தை வழக்கு தாக்கல் செய்த பிறகு செலுத்திவிட்டு அந்த ரசீதினை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி 1999 முதல் தாவா சொத்தில் சர்ச் அமைத்து ஊழியத்தை நல்ல முறையில் செய்து வந்தால் ஜெம்ஸ் நிறுவனத்தார் அந்த இடத்தில் கட்டிடம் கட்டி அதை பிரதிவாதியிடம் ஒப்படைத்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி அந்த இடத்தில் எப்படி ஊழியம் செய்தார் என்றால் அவர் சர்ச்சிற்கு வரும் காணிக்கைகளுக்கு சரியாக கணக்கு காட்டவில்லை என்பதாலும், சர்ச் சபைக்கு வரும் நபர்களிடம் மரியாதை குறைவாக பேசுவார் என்பதாலும், பிரதிவாதியின் நடவடிக்கை சம்பந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் ஜெம்ஸ் நிறுவனத்தாரிடம் போன் மூலம் கூறினேன். பொதுவாக சர்ச்சில் மதபோதகராக இருப்பவர்கள் அந்த சர்ச்சிற்கு வரும்காணிக்கைகளை வைத்துதான் ஜீவனாசம் செய்து வருவார்கள் என்றாலும் அதனால் அவர்களுக்கு தான் அந்த காணிக்கைகள் சேரும் என்றாலும் சரியல்ல.

பொதுவாக சொந்தமாக சர்ச் வைத்து நடத்தினால் தான் அவர்கள் காணிக்கையை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் பிரதிவாதிக்கு ஜெம்ஸ் நிறுவனத்தால் ஊதியம் கொடுக்கப்பட்டு வந்ததால் அவருக்கு மேற்படி காணிக்கைகளை எடுத்துக்கொள்ள உரிமை இல்லை. 2016 ஆம் ஆண்டு பிரதிவாதியை போதகராக நியமனம் செய்தார்கள். எவ்வளவு ஊதியம் கொடுத்தார்கள் என்றால் ரூ.5000/த்தை கட்டிடம் கட்டிய பிறகு ஊதியமாக கொடுத்தார்கள். கட்டிடம் கட்டுவதற்கு முன்பு பிரதிவாதி எங்கு தங்கியிருந்து மதபோதகராக இருந்தார் என்றால் தாவா சொத்திற்கு எதிர்புறம் உள்ள ேஹாட்டலில் இருந்தார். பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள சர்ச்சிற்கு பின்புறம் வீடு அமைத்து வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். பிரதிவாதியின் இரண்டாவது மகள் திருமணம் எங்கு நடந்தது என்றால் திருக்கடையூரில் உள்ள மண்டபத்தில் நடந்தது. மணமகளை சர்ச்சிக்கு பின்புறம் உள்ள பிரதிவாதியின் வீட்டிலிருந்து தான் மணமகன் வீட்டார் அழைத்து சென்றார் என்றால் சரியல்ல.

வாதி பிரதிவாதி மீது ஜெம்ஸ் நிறுவனத்தாரிடம் புகார் கொடுத்த பிறகு ஜெம்ஸ் நிறுவனத்தார் இருவரையும் விசாரித்து விட்டு பிரதிவாதியை போதகர் பதவிலிருந்து நீக்கிவிட்டு, தாவா சொத்தில் உள்ள சர்சை பூட்டி சாவியை என்னிடம் கொடுத்துவிட்டார்கள். அந்த விசாரணைக்கு ஜெம்ஸ் நிறுவத்தின் சார்பில் யார் வந்தார்கள் என்றால் ஏர்னஸ்ட் ரவி மற்றும் சந்திரன் என்பவரும் வந்தார்கள். மேற்படி விபரங்களை எனது வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. சந்திரன் என்பவர் ஜெம்ஸ் நிறுவனத்திற்கு தமிழ்நாட்டின் பொருளாலராக உள்ளார்.

காடாக இருந்த தாவா சொத்தினை சரிசெய்து அதில் 1999 முதல் பிரதிவாதி கீற்றுக்கொட்டகை அமைத்து சர்ச் நடத்தி வந்ததால் அவருக்கு ஜெம்ஸ் நிறுவனத்தார் கட்டிடம் கட்டி கொடுத்தார்கள் என்றாலும், அதனை அபகரிக்க வேண்டும் என்பதற்காக மேற்படி விபரங்களை மறைத்து பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ள நிலையில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கான காரணம் என்னவென்றால் எனது அனுபவத்தில் உள்ள தாவா சொத்தை பிரதிவாதி இடையூறு செய்துவருவதால் நான் இந்த வழக்கினை தாக்கல்

செய்துள்ளேன். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளபோது நான் பிரதிவாதியிடம் திருச்சபை நடந்துகொண்டிருக்கும்போது தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. திருச்சபை நடக்கவே இல்லை. திருச்சபையில் நடந்த தகராறு சம்பந்தமாக பொறையார் காவல் நிலையத்தார் என் மீதோ அல்லது பிரதிவாதியின் மீதோ வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளார்கள்.

2004 ஆம் ஆண்டு சுனாமியின்போது நாகை மாவட்டத்திற்கு வந்த கிருஸ்தவ தன்னார்வ தொண்டு நிறுவனம் பிரதிவாதிக்கு தாவாசொத்தில் சர்ச் கட்டி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.